# சிங்கப்பூரின் தந்தை லீ குவான் யூவுக்கு மன்னார்குடியில் நினைவுச் சின்னம்: முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு




**சிங்கப்பூர்:** "லீ குவான் யூவுக்கு தமிழ்நாட்டில் நினைவுச் சின்னம் எழுப்ப முடிவு செய்து இருக்கிறோம். இது தமிழ்நாட்டில் மன்னார்குடியில் அமைய இருக்கிறது. சிங்கப்பூரில் வசிக்கும் தமிழர்களில் பெரும்பகுதியினர் மன்னார்குடி, பட்டுக்கோட்டை பகுதிகளைச் சேர்ந்தவர்கள், எனவே, லீ குவான் யூ பெயரால் நூலகமும் சிலையும் மன்னார்குடியில் அமையும்" என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்தியில், "தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் இன்று *(24.05.2023)* சிங்கப்பூரில், சிங்கப்பூர் தமிழ்ச்சங்களுடன் இணைந்து நடைபெற்ற தமிழ் கலை பண்பாட்டு நிகழ்ச்சியில், "வேர்களைத் தேடி" என்ற அயலகத் தமிழ் இளைஞர்களுக்கான திட்டத்தை தொடங்கி வைத்தார். "வேர்களைத் தேடி" என்று புலம்பெயர்ந்து வாழும் இளைஞர்களை தாய்த் தமிழ்நாட்டின் மரபின் வேர்களோடு உள்ள தொடர்பை புதுப்பிக்கும் வண்ணமும், தமிழ் கலை பண்பாடு மற்றும் கலாச்சாரத்தினை அயலகத் தமிழர்களிடையே பரிமாற்றம் செய்யும் வகையிலும், ஆண்டுதோறும் *200* இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களை தமிழ்நாட்டிற்கு அழைத்து வந்து பண்டைய தமிழர்களின் கட்டடம்/சிற்பக்கலை, நீர் மேலாண்மை, ஆடைகள் மற்றும் ஆபரணங்கள், கலை இலக்கிய பண்பாடு, தொல்லியல் ஆய்வுகள், அறிஞர்கள் மற்றும் சான்றோர்களுடன் கலந்துரையாடல் என்ற கலாச்சார பரிமாற்ற சுற்றுலாத்

திட்டத்தினை தமிழக முதல்வர் தொடங்கி வைத்து, இத்திட்டத்திற்காக சிங்கப்பூரில் தெரிவு செய்யப்பட்ட *10* இளைஞர்களுக்கு சான்றிதழ்களையும் வழங்கினார்.


பின்னர் இந்நிகழ்வில் முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது*:* "தமிழ்நாடு அனைத்து வகையிலும் முன்னேறி வருகிறது. 'எல்லார்க்கும் எல்லாம்' என்ற உன்னதமான திராவிடக் கோட்பாடு அடிப்படையிலான ஆட்சியை நடத்தி வருகிறோம். *2030* நிதியாண்டிற்குள், *1* டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக தமிழ்நாட்டை மாற்றுவதற்கான ஒரு லட்சிய இலக்கினை அரசு நிர்ணயித்துள்ளது. எனவேதான் பல்வேறு தொழில்துறை முதலீட்டு மாநாடுகளை நடத்தியுள்ளோம். அடுத்த ஆண்டு உலக முதலீட்டாளர்கள் மாநாடு வரும் போது அதில் சிங்கப்பூர் முதலீட்டாளர்களும் அதிகமாக இடம்பெற வேண்டும் என்று விரும்புகிறேன்.

அடுத்து, சிங்கப்பூரின் தந்தை என்று போற்றப்படும் லீ குவான் யூவால்தான் தமிழர்களும் தமிழும் இங்கு உயர்வை அடைந்தது. நம்முடைய பேரறிஞர் அண்ணாவின் பேச்சால் ஈர்க்கப்பட்டவர் லீ குவான் யூ. சிங்கப்பூரில் அண்ணாவின் உரையைக் கேட்ட லீ குவான் யூ, தனது மூத்த சகோதரர் என்று பாசத்தோடு குறிப்பிட்டார். அதுமட்டுமல்ல, தனது அலுவலகத்துக்கு அண்ணாவை அழைத்து விருந்து கொடுத்தார். அதனால்தான் லீ குவான் யூ இறந்தபோது சிங்கப்பூரின் நாயகன் என்று போற்றினார் கருணாநிதி.

ஆகவே ஒரு மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்தில் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். லீ குவான் யூவுக்கு தமிழ்நாட்டில் நினைவுச் சின்னம் எழுப்ப நாங்கள் முடிவு செய்து இருக்கிறோம். இது தமிழ்நாட்டில் மன்னார்குடியில் அமைய இருக்கிறது. சிங்கப்பூரில் வசிக்கும் தமிழர்களில் பெரும்பகுதியினர் மன்னார்குடி, பட்டுக்கோட்டை பகுதிகளைச் சேர்ந்தவர்கள். அங்குள்ள பரவாக்கோட்டை, கூப்பாச்சிக்கோட்டை, திருமக்கோட்டை, உள்ளிக்கோட்டை, மேலத்திருப்பாலக்குடி, கீழத்திருப்பாலக்குடி, ஆலங்கோட்டை நெடுவாக்கோட்டை, மேலவாசல் உள்ளிட்ட கிராமங்களில் உள்ள ஒவ்வொரு

வீட்டுக்கும் சிங்கப்பூருடன் தொடர்பு உண்டு என்பதை நான் நன்றாக அறிவேன். இந்தக் கிராமங்களில் இருந்து வந்தவர்கள் தான் அதிகம். எனவே, லீ குவான் யூ பெயரால் நூலகமும் சிலையும் மன்னார்குடியில் அமையும் என்பதை மகிழ்ச்சியுடன் நான் மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று முதல்வர் பேசினார்.

## வரலாறு / நேருவிடம் செங்கோல் ஒப்படைத்த ஆதீனம்



புதிய நாடாளுமன்ற கட்டிடம் வரும் *28*-ம் தேதி திறக்கப்படுகிறது. இதில் வரலாற்று சிறப்புமிக்க சோழர் கால மாதிரி செங்கோலை மக்களவைத் தலைவரின் இருக்கைக்கு அருகே பிரதமர் மோடி நிறுவ உள்ளார். சுதந்திரத்தின்போது, நாட்டின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேருவிடம், பிரிட்டிஷ் இந்தியாவின் கடைசி வைஸ்ராயாக இருந்த மவுன்ட் பேட்டனால் வழங்கப்பட்டது இந்த செங்கோல் என்பது குறிப்பிடத்தக்கது

**நேருவிடம் செங்கோல் ஒப்படைத்த ஆதீனம்***:* ஆங்கிலேயர்களிடம் இருந்து சுதந்திரம் பெறுவதற்கு முன்பாக, சோழர் கால மாதிரி செங்கோலை ஒப்படைக்கும் விழாவுக்கான ஏற்பாடுகளை கவர்னர் ஜெனரலாக இருந்த ராஜாஜியிடம் ஒப்படைத்தார் ஜவஹர்லால் நேரு. இதையடுத்து இந்த விழாவுக்கான திட்டங்களை ராஜாஜி தீட்டினார். செங்கோலை ஒப்படைக்கும் நிகழ்வுக்கு ஆன்மிக தலைவர் யாரை அழைக்கலாம் என ராஜாஜி எண்ணியபோது, அவரது நினைவுக்கு வந்தவர் திருவாவடுதுறை ஆதீனம்.

உடனடியாக திருவாவடுதுறை ஆதீனத்தை தொடர்பு கொண்ட ராஜாஜி, செங்கோலை ஒப்படைக்கும் விழாவை நடத்திக் கொடுக்க முடியுமா என கேட்டுள்ளார்.

இந்த பொறுப்பை ஏற்றுக்கொள்வதாக திருவாவடுதுறை ஆதீனம் கூறினார். நள்ளிரவில் சுதந்திரம் பெறுவதற்கு *15* நிமிடங்களுக்கு முன்பாக இந்த சம்பிரதாயங்கள் நடந்தன. முதலில் செங்கோலை, திருவாவடுதுறை ஆதீனத்தின் மூத்த குரு, மவுன்ட்பேட்டனிடம் வழங்கினார். பின்பு அது திரும்ப பெறப்பட்டது. அதில் கங்கையில் இருந்து கொண்டுவரப்பட்ட புனித நீர் தெளிக்கப்பட்டு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு பிரதமராக பொறுப்பேற்கும் ஜவஹர்லால் நேருவிடம் கொண்டு செல்லப்பட்டது.

ஜவஹர்லால் நேருவுக்கு பொன்னாடை போர்த்தப்பட்டு, அவரிடம் சோழர் கால மாதிரி தங்க செங்கோலை, திருவாவடுதுறை ஆதீனத்தின் மூத்த குரு வழங்கினார். அதை முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேரு பெற்றுக் கொண்டார்.



சோழர் கால மரபுப்படி கடந்த *1947*-ம்ஆண்டு ஆகஸ்ட் *14*-ம் தேதி இரவு *11.45* மணிக்கு தேவாரத்தில் கோளறு பதிகத்தில் உள்ள *11* பாடல்களை பாடுமாறு ஆதீனம் கூறியிருந்தார். அதன்படி வேயுறு தோளிபங்கன் எனத் தொடங்கும் தேவாரத் திருப்பதிகத்தின் *11*-வது பாடலின் கடைசி அடியான, 'அடியார்கள் வானில் அரசாள்வர் ஆணை நமதே' என்று பாடி முடித்தனர். அப்போது, ஆட்சி அதிகாரம் மாற்றத்தை குறிக்கும் வகையில் திருவாவடுதுறை ஆதீனம் தம்பிரான் சுவாமிகள், தங்க செங்கோலை நேருவிடம் வழங்கினார். இந்நிகழ்ச்சி தமிழக இந்து அறநிலையத் துறை கொள்கை குறிப்பிலும் வெளியானது குறிப்பிடத்தக்கது.

**நினைவுகூர்ந்த 'மகா பெரியவர்' -** ஆங்கிலேயர்களிடம் இருந்து இந்தியர்களிடம் ஆட்சி கைமாறியதில் செங்கோல் ஒப்படைக்கப்பட்ட நிகழ்வு மிக முக்கியமானது. ஆனால், அது வரலாற்றில் முக்கிய அம்சமாக இடம் பெறவில்லை. கடந்த *1978*-ம் ஆண்டு சுதந்திர தினத்தன்று, காஞ்சி சங்கரமட நிகழ்ச்சி ஒன்றில், இந்த செங்கோல் கதையை எடுத்துக் கூறினார் அப்போதைய காஞ்சி மடாதிபதி சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள். இவர் 'மகா பெரியவர்' என அழைக்கப்பட்டார். இந்த கருத்து இவர் கடந்த *1994*-ம் ஆண்டு முக்தி அடைந்தபின் வெளியிடப்பட்ட புத்தகம் ஒன்றில் இடம் பெற்றது. அதன் பின்பு இது பற்றிய செய்திகளும், படங்களும் ஊடகங்களில் அதிகம் வெளியாயின. இது குறித்த கட்டுரை துக்ளக் இதழில் கடந்த *2021*-ம் ஆண்டு மே மாதம் வெளியானது.

இந்த கட்டுரையை பிரபல நடன கலைஞர் டாக்டர் பத்மா சுப்பிரமணியம் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து பிரதமர் அலுவலகத்துக்கு அனுப்பினார். வரலாற்றில் மறைக்கப்பட்டு, மக்களுக்கு தெரிவிக்கப்படாத இந்த செங்கோல் வழங்கப்பட்ட புனிதமான வரலாற்று நிகழ்வை *2021*-ம் ஆண்டு சுதந்திர தினத்தில் பொதுமக்களுக்கு தெரிவிக்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார். ஊடகங்களில் வெளியான செய்தியை மத்திய அரசு சரிபார்த்து, தற்போது செங்கோல் வழங்கப்பட்ட நிகழ்வை அங்கீகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## தமிழகம் முழுவதும் அரசு நிலங்களின் குத்தகைகளை ஆய்வு செய்து இணையத்தில் விவரம் வெளியிட ஐகோர்ட் உத்தரவு



**சென்னை**: தமிழகம் முழுவதும் உள்ள அரசு நிலங்களின் குத்தகைகளை மறு ஆய்வு செய்யவும், குத்தகை விவரங்களை ஒரு மாதத்தில் அரசு இணையதளங்களில் பதிவேற்றம் செய்யவும் தமிழக அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மதுரை வடக்கு கிராமத்தில் அரசுக்கு சொந்தமான 5.90 ஏக்கர் நிலத்தை பாண்டியன் ஹோட்டல் நிறுவனத்துக்கு 1968-ம் ஆண்டு ஒதுக்கியது. 25 ஆண்டுகளுக்கு வழங்கப்பட்ட இந்த நிலத்துக்கான குத்தகை காலம் 2008-ம் ஆண்டு முடிவுக்கு வந்தது. இதையடுத்து, நிலத்தின் சந்தை மதிப்பின் அடிப்படையில் வாடகையை நிர்ணயித்த அரசு, 36 கோடியே 58 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் வாடகையை செலுத்தாவிட்டால், நிலம் ஒதுக்கீடு ரத்து செய்யப்படும் என 2015-ம் ஆண்டு மதுரை வடக்கு தாலுகா தாசில்தாரர் உத்தரவு பிறப்பித்தார்.

இந்த உத்தரவை எதிர்த்து பாண்டியன் ஹோட்டல் நிறுவனம் சென்னை உயர் நீதிமன்றத்தில் 2015-ம் ஆண்டு மனு தாக்கல் செய்தது. இந்த வழக்கு நீதிபதி எஸ்.எம்.சுப்பிரமணியம் முன்பு விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி, "குத்தகை காலம் முடிந்தபின், அரசு நிர்ணயித்த வாடகையை செலுத்தாமல், 300 கோடி ரூபாய் மதிப்பிலான அரசு நிலத்தில், 14 ஆண்டுகள்

அனுமதியின்றி ஹோட்டல் நடத்தி அதிக லாபம் அடைந்துள்ளதாகக் கூறி, பாண்டியன் ஹோட்டல் நிறுவனத்தின் கோரிக்கையை நிராகரித்து உத்தரவிட்டார்.

நிதி நெருக்கடி உள்ளதாக அரசு கூறும் நிலையில், அரசு நிலங்கள் குத்தகைகளை மறு ஆய்வு செய்ய வேண்டியது அரசின் கடமை. ஒரு மாதத்தில் பாண்டியன் ஹோட்டலை அப்புறப்படுத்தி, அரசு நிலத்தை மீட்க வேண்டும். வாடகை பாக்கியை கணக்கிட்டு உடனடியாக வசூலிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அரசுக்கு உத்தரவிட்டுள்ளார்.

மேலும், வருவாய் நலனை பாதுகாக்கும் வகையில் மாநிலம் முழுவதும் உள்ள அரசு சொத்துகள் குத்தகைகளை மறு ஆய்வு செய்ய வேண்டும். அரசு நிலங்கள் குத்தகை விவரங்களை மாநில, மாவட்ட அளவில் ஒரு மாதத்தில் அரசு இணையதளங்களில் பதிவேற்றம் செய்ய வேண்டும் என தமிழக வருவாய் துறை செயலாளருக்கும், நில நிர்வாக ஆணையருக்கும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

EVA STALIN I